ந.க.எண்.9624/நி1/2026

இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம்,
சேலம்.

நாள்:09.09.2026.

பொருள் : நிருவாகம் – அன்னபூர்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம் – மருத்துவ பட்டப்படிப்பு (MBBS Degree Course) மாணவர்கள் சமூகம் சார்ந்த மருத்துவப் பயிற்சி (Community Medical Training) மேட்டூர் அணை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் எடப்பாடி மற்றும் ஓமலூர் அரசு தாலுக்கா மருத்துவமனைகளில் வழங்கிட அனுமதி வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. முதல்வர், அன்னபூர்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம் அவர்களின் கடித ந.க.எண்.344/A3/AMCH/2026, நாள்: 22.06.2026.

2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.444355/திவ–2/2/2026, நாள்: 27.08.2026.

*******

சேலம், அன்னபூர்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2020–2021 முதல் 2024–2025 வரை உள்ள ஆண்டுகளில் மருத்துவப் பட்டப்படிப்பு பயிலும் (MBBS Degree Course) மாணவர்களுக்கு சமூகம் சார்ந்த மருத்துவப் பயிற்சினை (Community Medical Training) சேலம் மாவட்டம், மேட்டூர் அணை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் எடப்பாடி அரசு தாலுக்கா மருத்துவமனைகளில் வழங்கிட அனுமதி கோரிய பார்வை 1–ல் காணும் கடிதத்தின் அடிப்படையில், பார்வை 2–ல் காணும் இயக்குநரக கடிதத்தின் வாயிலாக நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 2–ல் காணும் இயக்குநரக கடிதத்தின் படி, மேட்டூர் அணை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் எடப்பாடி மற்றும் ஓமலூர் அரசு தாலுக்கா மருத்துவமனைகளில் சேலம், அன்னபூர்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 2020–2021 முதல் 2024–2025 வரை உள்ள ஆண்டுகளில் மருத்துவப் பட்டப்படிப்பு பயிலும் (MBBS Degree Course) மாணவர்களுக்கு சமூகம் சார்ந்த மருத்துவப் பயிற்சி (Community Medical Training) பெற அனுமதித்து ஆணை வழங்கப்படுகிறது. மேலும், பயிற்சிக்கு அனுப்பப்படும் மாணவர்கள் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், இனிவரும் காலங்களில் மானவர்களுக்கான பயிற்சி கட்டண தொகையினை "1902" என்ற துறை தலைமை குறியீட்டு கணக்கில் செலுத்திட சேலம், அன்னபூர்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

V.A.Nandhini 9.9.26

இணை இயக்குநர் நலப்பணிகள்,
சேலம்.

09/09/26

பெறுநர் :

முதல்வர், அன்னபூர்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சேலம்.

--2

**நகல் :**

1. மருத்துவமனை கண்காணிப்பாளர், அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை, மேட்டூர் அணை.
2. முதன்மை மருத்துவ அலுவலர்கள், அரசு தாலுக்கா மருத்துவமனைகள், எடப்பாடி மற்றும் ஓமலூர்.

( மேற்காணும் மருத்துவக் கல்லூரி மாணவர்களை பயிற்சிக்கு அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்)

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது :**

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை.